1984 மார்ச் 14]

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

121. பொது (காவல்) துறையின் 20-11-1975 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 5-11-1983 ஆம் நாளிட்ட 1286 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935)] 10(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

122, தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 4-9-1983 ஆம் நாளிட்ட 874 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939)] 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

இணைப்பு I.

ஏதுவுமில்லை.

493 (5-ம் பக்கத்திலுள்ளஉடுக்குறியிட்ட வினா எண். 307-க்கான விடையைக் காண்க).

திண்டுக்கல் நகரத்தில் நில அளவை எண். 56077, 2/2/3/3 மற்றும் 4/1-ல் உள்ள 4 ஏக்கர் 1854 சதுர அடி நிலத்தினை விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு வருவாய்த் துறை 1976-ல் ஒதுக்கீடு செய்தது. இந்நிலத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட முனைந்த சமயத்தில், 1977-ம் ஆண்டில் ஏற்பட்ட வேடசந்தூர் வெள்ளத்தினால் இம்முயற்சியில் தடங்கல் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விளையாட்டு அரங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்புகள் தோன்றத் தொடங்கின. அவைகள் அவ்வப்போது அகற்றப்பட்டன என்றாலும் மைதானத்தின் மேல்புறத்தில் உருவாக்கப்பட்ட ஐயப்பன் கோயிலுக்கான ஆக்கிரமிப்பை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இந்த கோயில் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சங்கத்தாரால் உருவாக்கப்பட்டது. மதவழிபாடு எண்ணமுடைய மக்களின் மத உணர்வை புண்படுத்த விரும்பாததால், அம்மாவட்ட ஆட்சியர், சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எனினும் திண்டுக்கல் நகர ஐயப்ப பக்தர்கள் சார்பில் நீதிமன்றத்தில் மாவட்ட ஆட்சித் தலை

[1984 மார்ச் 14

வரை பிரதிவாதியாக்கி வழக்குத் தொடர்ந்து விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு தடையுத்தரவு பெறப்பட்டது. இந்த வழக்கு 1982 ஆம் ஆண்டு இறுதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனிடையே நில நிர்வாக ஆணையர் அவர்களின் ஆலோசனைப் படி, ஐயப்பகோன்வில் கட்டியுள்ள இடத்தின் பரப்பளவு 6000 சதுர அடிகளை மட்டும், ஏற்கனவே விளையாட்டு அரங்கம் கட்டு வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பிலிருந்து நீக்கி, எஞ்சியுள்ள நிலப்பரப்பில் விளையாட்டு அரங்கம் நிர்மானம் செய்யலாம் என்று வருவாய்த் துறை, மே 1983-ல் அனுமதி அளித்ததன் அடிப்படையில், இந்நிலத்தை சுற்றி வேலியாக்கும் பொருட்டு திண்டுக்கல் நிர்வாகப் பொறியாளரிடம், தமிழ் நாடு மாநில விளையாட்டு மன்ற நிதியிலிருந்து ரூ. 37,000 மும் மதுரை மாவட்ட விளையாட்டு மன்ற நிதியிலிருந்து ரூ. 7,500-ம் வழங்கப்பட்டுள்ளது. வேலி அமைக்கும் பணியும், நிலத்தை சமப்படுத்தும் பணியும் தொடங்கப்படவுள்ளன. விளையாட்டு அரங்கததிற்கான வரைபடம் மற்றும் மதிப் பீடுகளை திண்டுக்கல் பொதுப் பணித்துறை நிர்வாகப் பொறியாளர் தயாரித்து வருகிறார். வரை படங்கள் மற்றும் மதிப்பீடுகளை அரசில் பெ[illegible]வுடன் திண்டுக்கல் விளையாட்டு அரங்க கட்டுமான வேலைக்கான நிர்வாக ஒப்புதல் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும். வேலிக்கான கான்கிரீட் தூண்கள் நடப்படும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது.

இணைப்பு II.

506 (18-ம் பக்கத்திள்ள உடுக்குறியிட்ட வினா எண். 253 க் கான விடையைக் காண்க.)

திருச்சி நகரில் ஜாதியின் பெயரில் உள்ள தெருக்களின் பட்டியல்.

(1) சங்கரம்பிள்ளை சத்திரம் ரோடு, (2) சங்கிலிசோனார் சந்து, (3) பாண்டியம்பிள்ளை சந்து, (4) நரசுப்பிள்ளை சந்து, (5) வசந்தராயப்பிள்ளை சந்து, (6) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைத் தெரு, (7) குருநாதப்பிள்ளைத் தெரு (8) நரசிம்மலு நாயுடுத் தெரு, (9) கோபாலகிருஷ்ணம் பிள்ளைத் தெரு, (10) நடு முத்தலுகுப்பிள்ளைத் தெரு, (11) மாப்பிள்ளை நாயக்கன் தெரு, (12) சௌந்தரப்பாண்டியன் பிள்ளைத் தெரு, (13) காசியாப்பிள்ளை சந்து, (14) காசியாப்பிள்ளை சந்து, (15) மல்லீசாகிப் தெரு, (16) முத்தளகுப் பிள்ளைத் தெரு, (17) மாரியப்ப முதலியார் சந்து, (18) சஞ்சீவிராவ் சந்து,